Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 619/2025 PW-1**

Name : குணசுந்தரி
Father / Husband name : மதியழகன்
Village : பாபூண்டி
Age : 36

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.05.2026

Accused present. Defence counsel present. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

__முதல் விசாரணை__

நான் மளிகைக்கடையில் வேலை செய்கிறேன். சாட்சி குமுதம் என்பவரை தெரியும். சாட்சி அய்யாதுரையை தெரியும். சாட்சி சுலோச்சானவை தெரியாது. ஆஜர் எதிரி எனது கணவர். 01.10.2024 அன்று இரவு 07.45 மணியளவில் திண்டிவனம் செஞ்சி பேருந்து நிறுத்தத்தில் வேலையை முடித்துவிட்டு பேருந்திற்காக நின்றிருந்தபோது எதிரி போதையில் வந்து எனது துணியை பிடித்து இழுத்து தேவிடியா, நாராக்கூதி என்று அசிங்கமாக திட்டி என்னை சாகடித்துவிடுவேன் என்று சொல்லி எனது வலது காதை கையால் பிடித்து இழுத்து காதை அறுத்துவிட்டார். என்னுடன் குமுதம் என்பவர் இருந்தார். குமுதம் மற்றும் அருகிலிருந்தவர்கள் எதிரியை விலக்கிவிட்டார்கள். பின்னர் எனது தம்பி அய்யாதுரைக்கு போன் செய்து அவர் வந்தவுடன் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மறுநாள் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது சம்பவம் நடந்தயிடம் திண்டிவனம் என்பதால் திண்டிவனம் காவல் நிலையத்திற்கு செல்லுமாறு சொன்னார்கள். பின்னர் திண்டிவனம் காவல்நிலையம் வந்து நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தது. **அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 619/2025 PW-2**

Name : குமுதம்
Father / Husband name : தானப்பன்
Village : வெண்மணியாத்தூர்
Age : 29

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.05.2026

Accused present. Defence counsel present. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் ஜீஸ் கடையில் வேலை செய்கிறேன். அ.சா.1 குணசுந்தரியை எனது அக்கா. சாட்சிகள் அய்யாதுரை மற்றும் சுலோச்சானவை தெரியும். ஆஜர் எதிரி எனக்கு தெரியும், எனது மாமா. 01.10.2024 அன்றையதினம் இரவு 07.45 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டு திண்டிவனம் செஞ்சி பேருந்துநிறுத்தத்தில் பேருந்திற்காக வந்தேன் அப்போது அ.சா.1ம் வேலையை முடித்துவிட்டு வந்தார். அப்போது எதிரி அக்காவிடம் அசிங்கமாகபேசி, தாடையில் அடித்து, கம்மலுடன் வலது காதை பிடித்து இழுத்தார். அங்கிருந்தவர்கள் எதிரியை மறித்தார்கள். காயம்பட்ட எனது அக்காவை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அக்காவை உயிருடன் விடமாட்டேன் என்று மிரட்டினார். நான் எனது அண்ணன் அய்யாதுரைக்கு போன் மூலம் விவரம் சொன்னேன், அவரும வந்துவிட்டார். சம்பவம் சம்மந்தமாக அக்கா புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 619/2025 PW-3**

Name : அய்யாதுரை
Father / Husband name : தாமோதரன்
Village : வெண்மணியாத்தூர்
Age : 36

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.05.2026

Accused present. Defence counsel present. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் டிரைவர் வேலை செய்கிறேன். அ.சா.1 குணசுந்தரியை எனது அக்கா. அ.சா.2 குமுதம் எனது தங்கை. ஆஜர் எதிரி எனக்கு தெரியும், எனது அக்காவின் கணவர். 01.10.2024 அன்றையதினம் இரவு 07.50 மணியளவில் நான் வேலையிலிருந்தபோது எனது தங்கை எனக்கு போன் செய்து திண்டிவனம் செஞ்சி பேருந்துநிறுத்தத்தில் அக்காவின் காதிலிருந்த கம்மலை எதிரி அறுத்துவிட்டதாக சொன்னார். நான் சென்று அக்காவை பார்த்தபோது அவரது வலது காதில் இரத்தமாக இருந்தது. நான் காயம்பட்ட எனது அக்காவை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.